# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
# TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

## அனைத்துலகத் தேர்வு
## 2020
# தமிழ்மொழி
## வளர் தமிழ் 8

சுட்டெண்: | | | | | | | | | |

நேரம்: 180 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ம் முறை | 2ம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 15 | | | |
| 6 | 05 | | | |
| 7 | 20 | | | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | | | |

| | |
|---|---|
| 1ம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ம் முறை - பெயர் / ஒப்பம் | |

**1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.**

1. மெல்லின மெய் எழுத்துகளின் கூட்டம்

அ) ய்ர்ல்வ்ழ்ள் ☐ ஆ) க்ச்ட்த்ப்ற் ☐

இ) ங்ஞ்ண்ந்ம்ன் ☐ ஈ) க்ங்ச்ஞ்ம்ன் ☐

2. தமிழ்நாட்டில் ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடியவர்

அ) சங்கிலியன் ☐ ஆ) கயிலைவன்னியன் ☐

இ) பண்டாரவன்னியன் ☐ ஈ) மருதுபாண்டியன் ☐

3. பழம் மரத்திலிருந்து விழுந்ததை நான் கண்டேன் என்பது

அ) கூற்றுச்சொல்லியம் ☐ ஆ) தனிச்சொல்லியம் ☐

இ) கலப்புச்சொல்லியம் ☐ ஈ) கூட்டுச்சொல்லியம் ☐

4. சென்றான் என்ற வினைமுற்றின் வினையடி

அ) சென்ற ☐ ஆ) செல் ☐

இ) சென்று ☐ ஈ) சென்றான் ☐

5. எமக்குக் கிடைத்த கழக நூல்கள் ______________ க் காலத்துக்கு உரியவை.

அ) முதற்கழக ☐ ஆ) இடைக்கழக ☐

இ) நடுக்கழக ☐ ஈ) கடைக்கழக ☐

6. பயிலல் என்பது

அ) கற்றல் ☐ ஆ) சிரித்தல் ☐

இ) பழகுதல் ☐ ஈ) கண்டித்தல் ☐

7. கார்த்திகை பூத்தது.

அ) தொழிலாகுபெயர் ☐ ஆ) காலவாகுபெயர் ☐

இ) சினையாகுபெயர் ☐ ஈ) பொருளாகுபெயர் ☐

8. தமிழ் உள்ளளவும் வாழ்க என்று அதியர்மான் வாழ்த்தியது

அ) கபிலரை ☐ ஆ) பாவேந்தரை ☐

இ) பாரதியாரை ☐ ஈ) ஔவையாரை ☐

9. **குறள்:**

எல்லா விளக்கும் விளக்கல்லச் சான்றோர்க்குப்

__________ விளக்கே விளக்கு

அ) மெய்யா ☐ ஆ) பொய்யா ☐

இ) செய்யா ☐ ஈ) கொய்யா ☐

10. நாடகத்தை நடியுங்கள். இச் சொல்லியத்தின் தோன்றா எழுவாய்

அ) நீங்கள் ☐ ஆ) நாங்கள் ☐

இ) அவர்கள் ☐ ஈ) இவர்கள் ☐

11. படைகொண்டு நாற்புறமுஞ் சூழ்ந்து நிற்றல்

அ) தீவு ☐ ஆ) ஒத்திகை ☐

இ) முற்றுகை ☐ ஈ) போர் ☐

12. 15 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர்

அ) பாவேந்தர் ☐ ஆ) விபுலாநந்தர் ☐

இ) காளமேகம் ☐ ஈ) பாரதியார் ☐



TEDC

13. ஊரார் கொடுக்கும் செல்லத்தில் செருக்கொடு மலர்ந்திருந்த பூ

அ) முல்லை ☐ ஆ) காட்டுமல்லிகை ☐

இ) அல்லி ☐ ஈ ) சம்பங்கி ☐

14. பண்டாரவன்னியனுடன் போரிட்டவர்

அ) போர்த்துக்கேயர் ☐ ஆ) ஆங்கிலேயர் ☐

இ) ஒல்லாந்தர் ☐ ஈ ) சிங்களவர் ☐

15. உள்ளத்தின் இருளை நீக்குவது

அ) விளக்கு ☐ ஆ) பொய்மை ☐

இ) வாய்மை ☐ ஈ ) தூய்மை ☐

16. கழுதை கத்தும், அது போல் குதிரை

அ) சீறும் ☐ ஆ) பிளிறும் ☐

இ) முழங்கும் ☐ ஈ ) கனைக்கும் ☐

17. இந்தியாவிடம் அறம் கேட்டு உண்ணா நோன்பு மேற்கொண்டவர்

அ) திலீபன் ☐ ஆ) தெரேசா ☐

இ) ஆழிக்குமரன் ☐ ஈ ) தமிழ்ச்செல்வன் ☐

18. தீந்தமிழ் என்பதைப் பிரித்தால்

அ) தீந் + தமிழ் ☐ ஆ) தீ + தமிழ் ☐

இ) தீம்ந் + தமிழ் ☐ ஈ ) தீம் + தமிழ் ☐

19. புளியங்காய் என்ற சொல்லில் இடம்பெறும் சாரியை

அ) அத்து ☐ ஆ) அம் ☐

இ) அற்று ☐ ஈ ) புளி ☐

20. உடலைச் சுட்டெரிக்கும் வெய்யில் எறிக்கும் காலம்

அ) இளவேனில் ☐ ஆ) கார் ☐

இ) முதுவேனில் ☐ ஈ ) கூதிர் ☐

21. சிங்கத்தின் இளையது குருளை போல, பன்றியின் இளையது

அ) கன்று ☐ ஆ) பறழ் ☐

இ) பேத்தை ☐ ஈ ) பிள்ளை ☐

22. பண்டாரவன்னியனைக் காட்டிக் கொடுத்தவன்

அ) கதிர்காமநாயகம் ☐ ஆ) கட்டபொம்மன் ☐

இ) குலசேகரமுதலியார் ☐ ஈ ) மருதுபாண்டியன் ☐

23. புலவர் ஆய்ச்சியிடம் சென்று ஒரு குவளை மோர் வாங்கிப் பருகினார். இதில் இடம்பெற்றிருப்பது

அ) 7 ஆம் வேற்றுமை ☐ ஆ) 4 ஆம் வேற்றுமை ☐

இ) 2ஆம் வேற்றுமை ☐ ஈ ) 5 ஆம் வேற்றுமை ☐

24. ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்று

அ) திருக்குறள் ☐ ஆ) நாலடியார் ☐

இ) வளையாபதி ☐ ஈ ) மூதுரை ☐

25. கார் காலம் என்பது

அ) மழைக்காலம் ☐ ஆ) கடல் ☐

இ) விண்மீன் ☐ ஈ) காடு ☐

26. ஓ என்பது

அ) உரிச்சொல் ☐ ஆ) வினைச்சொல் ☐

இ) இடைச்சொல் ☐ ஈ) பெயர்ச்சொல் ☐

27. தகடூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தவர்

அ) பாரி ☐ ஆ) தொண்டைமான் ☐

இ) பேகன் ☐ ஈ) அதியர்மான் ☐

28. அறிவிலார் நட்பு ____________ போன்றது.

அ) முழுமதி ☐ ஆ) தேய்பிறை ☐

இ) வளர்பிறை ☐ ஈ) எழுகதிர் ☐

29. தை முதல்நாள் தமிழரால் கொண்டாடப்படுவது

அ) தைப்பொங்கல் ☐ ஆ) வாணிவிழா ☐

இ) ஆடிப்பிறப்பு ☐ ஈ) மாட்டுப்பொங்கல் ☐

30. போற்றிப்புகழ்ந்து என்பது

அ) அடுக்கிடுக்குத்தொடர் ☐ ஆ) இணைமொழி ☐

இ) அடுக்குத்தொடர் ☐ ஈ) இரட்டைக்கிளவி ☐

புள்ளிகள் 30

**2) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.**

தமிழில் மிகவும் பழமை வாய்ந்த இலக்கண நூலாக விளங்குவது தொல்காப்பியம். இதனை எழுதியவர் தொல்காப்பியர். இந்த நூலில் எழுத்து, சொல், பொருள் என்ற மூன்று அதிகாரங்கள் உள்ளன. தொல்காப்பியத்திற்குப் பனம்பாரனார் என்பவர் பாயிரம் எழுதியுள்ளார். பாயிரம் என்றால் முன்னுரை என்பது பொருள். இதற்கு இளம்பூரணர், நச்சினார்க்கினியர், கல்லாடர் போன்ற பலர் உரை எழுதியுள்ளனர். ''ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியம்'' என்று இந்நூல் போற்றப்படுகின்றது. தொல்காப்பியத்தைப் பின்பற்றியே நன்னூல் என்னும் இலக்கண நூலைப் பவணந்தி என்பவர் இயற்றினார். இன்று, இந்நூலே மாணவர்கள் இலகுவாகக் கற்கத் தகுந்த இலக்கண நூலாகப் பள்ளிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் பயன்படுத்தப்படுகிறது.

1. தொல்காப்பியம் எவ்வாறு போற்றப்படுகிறது?

______________________________

______________________________

2. நன்னூலை இயற்றியவர் யார்?

______________________________

______________________________

3. தொல்காப்பியத்திற்கு உரை எழுதியவர்களில் இருவர் பெயர்களைத் தருக.

______________________________

______________________________

4. இந்நூலில் எத்தனை அதிகாரங்கள் உள்ளன?

______________________________

______________________________

5. 'பாயிரம்'என்பதன் பொருள் யாது?

______________________________

புள்ளிகள் 10



TEDC

**3) பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.**

1. பண்டாரவன்னியனுடன் தொடர்புடைய ஊர்கள் இரண்டின் பெயர்களைத் தருக.

2. அதியர்மான் ஔவையாரை யாரிடம் தூதாக அனுப்பினான்?

3. 'காரென்று பேர் படைத்தாய் ககனத்துறும்போது' என்று யார் எதனைப் பார்த்துக் கூறினார்?

4. பண்டாரவன்னியனிடம் படை உதவி பெற்றுக்கொண்ட கண்டி மன்னன் யார்?

5. தை பிறந்ததும் முற்றித்தலை சாய்ந்து நிற்பது எது ?

6. எத்தனை வகைச் சிற்றிலக்கியங்கள் தமிழில் உள்ளன ?

7. சைவநெறி சார்ந்த இலக்கியங்கள் இரண்டின் பெயர்களைத் தருக.

புள்ளிகள் 10

4) **தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்தமாக வைத்து, கவிதையை முழுமையாக்குக.**

## நட்பு

| | | | | |
|---|---|---|---|---|
| முடியாது | கண்ணால் | பிரிவு | பிடிக்க | காண |

காற்று வீசுவதை உணர முடியும்
________________ அதைப் பார்க்க முடியாது
நீரின் விரைவுதனை காண முடியும் - ஆனால்
கைகளால் அதை ________________ முடியாது

வானின் அழகைச் சுவைக்க முடியும் - ஆனால்
அதனை நம்மால் தொட ________________
மின்னல் ஒளியைக் கண்ணால் ____________ முடியும் - ஆனால்
அதை நாம் முன்கூட்டியே அறிய முடியாது

நட்பு என்ற ஒன்றில் மட்டும்
அனைத்தும் மாறிமாறி நடக்கும்
________________ என்ற ஒன்று மட்டும்
நட்பு என்ற இலக்கணத்தில் இல்லை

புள்ளிகள் 10

## 5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1. ஒவ்வோர் எடுத்துக்காட்டுகள் தருக.

இடவாகுபெயர் ______________________

குணவாகுபெயர் ______________________

2. பின்வரும் வேற்றுமை உருபுகள் இடம்பெறுமாறு சொல்லியங்கள் எழுதுக.

6 ஆம் வேற்றுமை ______________________

4 ஆம் வேற்றுமை ______________________

3. ஒவ்வோர் எடுத்துக்காட்டுத் தருக.

தெரிநிலைவினை ______________

இரட்டைக்கிளவி ______________

பெயரெச்சம் ______________

4. வினைமுற்றுகளின் காலங்களையும் இடைநிலைகளையும் கண்டறிந்து எழுதுக.

| வினைமுற்று | காலம் | இடைநிலை |
|---|---|---|
| கற்பான் | ______________ | ______________ |
| விளையாடினாள் | ______________ | ______________ |
| குடிக்கின்றன | ______________ | ______________ |

5. பின்வரும் சொற்களுக்கு எதிர்ப்பொருள் தருக.

அண்மை ______________________

உயர்வு ______________________

ஆக்கல் ______________________

புள்ளிகள் 15



TEDC

**6) மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.**

1. தஞ்சைப் பெருங்கோவில் மிகவும் ____________ .

   ( பளமையானது, பழமையானது )

2. விண்மீன்கள் ____________ காணப்படுகின்றன.

   ( வாணத்தில், வானத்தில் )

3. உந்துகளிடமிருந்து வெளியேறும் ____________ வளி மாசடைகிறது.

   ( கழிவுகளினால், களிவுகளினால் )

4. பெரியோரது சொல்லைக் கேட்காவிட்டால் துன்பம் ____________.

   ( நேரிடும், நேறிடும் )

5. தைப்பொங்கல் அன்று மேலோங்கி நிற்கும் தமிழர் பண்பு

   ____________ .

   ( விருந்தோம்பல், விறுந்தோம்பல் )

புள்ளிகள் 05

**7) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 125 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

✸ பண்டாரவன்னியன்

✸ காட்டுமல்லிகை

✸ உமது வாழிடமொழிப்பள்ளி

- படிக்கும் பள்ளி, வகுப்புநிலை, பாடங்கள்
- வாழிடமொழிப் பள்ளி பற்றி நீர் அறிந்தவை ( மாணவர்கள், ஆசிரியர்கள்.... )
- உமது எதிர்காலம் பற்றி.......

புள்ளிகள் 20

TEDC